தொகுதி-6 எண் 3
Vol. 6 No. 3

ஆனி-புரட்டாசி 2049
July - September 2018

ISSN : 2321-0737

**Chief Editor**
*Dr. M. Sadik Batcha*

**Advisory Editor**
*Dr. N. Chandrasegaran*

**Editorial Board**
*Dr. S. Kumaran*
*Dr. Oppila Mathivanan*
*Dr. R. Rajagopal*
*Dr. Aranga. Pari*
*Dr. PM. Jamahir*
*Dr. S. Rajaram*
*Dr. R. Velmurugan*
*Dr. S. Chitra*
*Dr. E.R. Ravichandran*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. K. Thilagavathi*
*Dr. P. Velmurugan*
*Dr. G. Sheik Meeran*
*Dr. P. Selvakumar*
*Dr. M. Karunanithi*
*Dr. A. Kaleel Rahman*
*Dr. A. Senthil Kumar*
*Dr. S. Tamil Velu*
*Dr. M. Arunachalam*
*Dr. R.Vijayarani*
*Dr. V. Dhanalakshmi*
*Dr. S. Ramesh*
*Dr. J. Chandrakala*
*Dr. C. Prabhakaran*
*Dr. A. Thoufiq Rameez*
*Dr. S. Bharathi Prakash*
*Dr. A. Dharmarajan*
*Dr. J. Selva Kumar*
*Mr. D. Alagudurai*
*Mr. G. Senthil*

பல்கலைக் கழக மானியக் குழு அங்கீகாரம் பெற்றத் தமிழ்ப் பன்னாட்டு ஆய்விதழ்

UGC APPROVED INTERNATIONAL THAMIZH JOURNAL

UGC Journal No.40719

# செம்மொழித் தமிழ்

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)

# Journal of Classical Thamizh

(A Quarterly International Multilateral Thamizh Journal)

*Published by*
**RAJA PUBLICATIONS**
No. 10 (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India.
Mobile : 9600535241
Website : www.rajapublications.com

17 பகுதி-2
Part -2

ISSN : 2321-0737

ஆனி-புரட்டாசி 2049

July - September 2018

தொகுதி-6 எண் 3

Vol. 6 No. 3


| | | | |
|---|---|---|---|
| 90. | அ.லதா | சங்க இலக்கியங்களில் பயணம் | 401-403 |
| 91. | அ.செந்தில்ராஜா | புறநானூற்றில் பெண்பாற் புலவர்கள் புலப்படுத்தும் வாழ்வியல் சிந்தனைகள் | 404-407 |
| 92. | வே. சரண்யா | இலக்கணம் சார்ந்த இலக்கியக் கூற்று | 408-411 |
| 93. | ச.யோகச்சந்திரன் | கீழ்க்கணக்கு அறநூல்களில் மனித நேயம் | 412-415 |
| 94. | ரா.மகேஸ்வரி | திருமங்கையாழ்வார் பாசுரங்களில் அகப்பொருள் மரபுகள் | 416-420 |
| 95 | வே.அகிலா | சங்க இலக்கியத்தில் வேளாண் மேலாண்மை | 421-423 |
| 96. | பா.அனிதா | பெண் சில கருத்துக்கள் - அறஇலக்கியம் | 424-428 |
| 97. | ம.அனிதா | ஐவகை நில உணவுகள் | 429-431 |
| 98. | க.இராமதுரை | திருக்குறள் காட்டும் வாழ்வியல் அறங்கள் | 432-434 |
| 99. | ப.இராஜேஷ் | திணை, பால்,எண், இடம் அடிப்படையில் மலையாள மொழியைக் கற்பித்தல் | 435-438 |
| 100. | கோ.ஈசுவரன் | மணிமேகலையில் வாழ்வியல் அறம் | 439-442 |
| 101. | சே.கல்பனா | சொல்லதிகாரம் - சேனாவரையர் உரையும் வேற்றுமையியலும் | 443-448 |
| 102. | பி. கலைமணி | பழமொழி நானூறு காட்டும் தனி மனித பொருளாதாரம் | 449-452 |
| 103. | க.கலாதேவி & இரா.ச.சுகிர்தா பஸ்மத் | மீவியல்புக் கூறுகளும் தமிழ் இலக்கியங்களும் | 453-456 |
| 104. | த.காளீஸ்வரி | திலகபாமா கவிதைகளில் தொன்மங்கள் | 457-460 |
| 105. | சகோதரி.தோ.கிரேசி | விவேக சிந்தாமணியில் அறநெறிகள் | 461-463 |
| 106. | இரா.சந்திரசேகரன் | பெரியாரின் தொலைநோக்குப் பார்வை | 464-467 |
| 107. | சோ.சந்திரசேகர் | குறுந்தொகையில் வாழ்வியல் | 468-470 |
| 108. | த.சரண்யாதேவி | தொல்காப்பியம் முத்துவீரியம் வேற்றுமையியல் சார்ந்த கருத்துகள் | 471-474 |
| 109. | கு.ர.சரளா & ஜே.சுசிதா ரோஸி | செல்லாத பணம் புதினம் சொல்லும் பெண்களின் பிரச்சனைகள் | 475-481 |
| 110. | ப.சுமதி | தண்ணீர் மாசுபாடும் தமிழகத்தின் எதிர்காலமும் | 482-484 |
| 111. | இரா. திலகா | மதுரைக் காஞ்சியில் காணும் மதுரை மாநகர்ச் சிறப்புகள் | 485-491 |
| 112. | கு.ர.சரளா & இரா. நிவேதா | தேனி சீருடையான் படைப்புகளில் சமூகம் | 492-499 |
| 113. | த.சுபா & சி.கணேஷ் | இருபதாம் நூற்றாண்டு பெண் கவிஞர்களின் கவிதைகளில் பின் நவீனத்துவ இயல்புகள் | 500-504 |
| 114. | மா. பாப்பா | திருவேங்கடத்தந்தாதியில் புராணக் கூறுகள் | 505-512 |
| 115. | வெ.பானுமதி | காரைக்காலம்மையாரின் தமிழ்த் தொண்டு | 513-516 |
| 116. | ப.மணிகண்டன் | ஐங்குறுநூறு காட்டும் அகவாழ்க்கை அழகியல் | 517-519 |
| 117. | சே.மணிகண்டன் | கந்தபுராண வாழ்வியல் விழுமியங்கள் | 520-522 |
| 118. | ஆ.முத்துக்குட்டி | தமிழ் மொழி வளர்ச்சியும் சங்க கால மன்னர்களும் - ஓர் ஆய்வு | 523-529 |
| 119. | ச.முத்துமாரி | ஐங்குறுநூற்றில் நீர்த்தாவரங்கள் | 530-533 |
| 120. | ப.சு.மூவேந்தன் | சுந்தரர் தேவாரத்தில் அருளாற்றல் | 534-539 |
| 121. | வெ.நிர்மலா | கோயில்களும் வழிபாட்டுமுறைகளும் | 540-544 |
| 122. | சி.யுவராஜ் | சங்க இலக்கியத்தில் புலவரும் புலமையும் | 545-548 |
| 123. | ரா.ராதிகா | வைரமுத்துவின் படைப்புகளில் இயற்கை | 549-552 |
| 124. | சகோ. பி.ரெஜினா | அகநானூறில் இடம் பெற்றுள்ள ஆகாயம் | 553-558 |
| 125. | செ.ரெஜினா | வள்ளுவர் வழங்கும் அறம் | 559-566 |
| 126. | கோ.லதா | அருணகிரிநாதரின் திருப்புகழ், கந்தரனுபூதி, கந்தரலங்காரம் பனுவல்களில் முருகன் | 567-570 |
| 127. | சு.வாசுகி | மருத நிலப் பெண்களின் நிலம் சாரா தொழில்கள் | 571-577 |
| 128. | சி. வீரமணி | காளாமுகமும் பாசுபதமும் ஒப்பாய்வு | 578-592 |
| 129. | கோ.கலைச்செல்வன் | பெரியபுராணத்தின் மாண்புகள் | 593-596 |
| 130. | N. GAYATHRI | SAIVA LITERATURE DURING THE PALLAVA AGE | 597-598 |
| 131. | ம. ஜெயந்தி | சங்க காலம் காட்டும் அறம் | 599-601 |
| 132. | மி. ஜோஸ்பின் ரேணுகா | இலக்கியத்தில் இறைச்சியும், காதல் நயமும் | 602-608 |
| 133. | இரா.ஜெயந்தி | இயேசு காவியத்தில் அறநெறிகள் | 609-611 |
| 134. | ம.அலெக்ஸ் ஷான் | அம்மானையின் வளர்நிலைகள் | 612-615 |
| 135. | சு.மகேஸ்வரி | தமிழிசையில் ஏழிசையின் பிறப்பும் இயற்கை ஒலிகளும் | 616-618 |
| 136. | T. ASHOK KUMAR | மேலாண்மை பொன்னுச்சாமியின் சிறுகதைகளில் கிராமம் | 619-621 |
| 137. | மு.பார்வதி & ஜே.ஜெயரதி பொன்மலர் | கவிஞர் தியாரூவின் கவிதைகளில் குடும்ப உறவுகள் | 622-625 |
| 138. | ம.விஜயலெட்சுமி | சிலப்பதிகாரத்தில் புறத்திணைகள் | 626-630 |
| 139. | M. வள்ளிக்கண்ணு & இ. மார்ட்டின் ஆரோக்கியராஜ் | சைவ சித்தாந்தத்தில் - அட்டாங்க யோகம் | 631-636 |


[illegible]...

Published by : **Raja Publications,** No. 10, Upstair, Ibrahim Nagar, Khajamalai, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, [illegible]

Printed : **The Printing House,** Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Ph : +91 - 431-2420121

# வள்ளுவர் வழங்கும் அறம்

முனைவர் செ. ரெஜினா
உதவிப் பேராசிரியை, தமிழ்த் துறை, ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் தன்னாட்சிக் கல்லூரி, பெரியகுளம், தமிழ்நாடு, இந்தியா.

**முன்னுரை:**

'அறு' என்ற பகுதியும் 'அம்' என்ற விகுதியும் இணைந்தே அறம் 'அறு' என்னும் அடியிலிருந்து வழி, பகு, தெளிவு, திண்மை, உருவாக்கு, துண்டி, வேறுபடுத்து முதலிய பல பொருள்களைப் பெறலாம். எனவே அறு + அம் = அறம். அறு - முடிவு செய் ஒன்றன் நன்மை தீமையை முடிவு செய்து நன்மையைச் சார்தல் அதற்கேற்ப ஒழுகுதல் அறம். 'அறத்திற்காகவே அறஞ்செய்தல்' என்பது சாத்தனார் கோட்பாடு. எனவே வாழும் வழியைத் தெளிவாகத் திண்மையாக நமக்கு எடுத்துக் காட்டுவது அறமே.

உலகிலுள்ள மக்கட்கெல்லாம் வாழும் வழிகள் காலத்தால், இடத்தால் சூழ்நிலையால் மாறுபடும் தன்மை வாய்ந்தவை. உலக சமுதாயம் உய்யும் வழி எதுவென என்னும் போது அவ்வழி, வையத்துள் வாழ்வாங்கு வாழ வேண்டிய நெறியை வகுத்துத் தந்த சான்றோர்கள் வழியே என்பது தெளிவாகும். இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அண்ணல் காந்தியடிகள், நேரு, கர்மவீரர் காமராஜர் போன்றோர்களின் அறநெறி வழியைக் கூறலாம்.

**அறம் - விளக்கம்:-**

அறம், பொருள், இன்பம் வீடு என்னும் இந்நான்கினுள் முதலிடம் பெறுவது அறம். இவ்வறம் மனித வரலாற்றுடன் தொடர்புடைய ஒன்றாகும். இன்பமும் பொருளும் அறவழியிலேயே அமைய வேண்டும் என்பது வள்ளுவரின் கோட்பாடாகும். "அறமே அறிவு, அறிவே அறம்" என்கிறார் கிரேக்கத் தத்துவயானி சாக்ரடீஸ். "அறநெறி முதற்றே அரசின் கொற்றம்" என்கிறது புறநானூறு. அறம் என்ற சொல் புண்ணியம், தகுதி, பெரியோர் இயல்பில் ஒன்று; அறச்சாலை, புனிதன், கற்பு, அறநூல், அறக்கடவுள், ஒழுக்கம், இன்சொல், இல்வாழ்க்கை, நூற்பயன் நான்கில் ஒன்று, நீர்மை, சமயம், ஞானம், தருமம், நற்பண்பு, நீதி, கடமை, ஈகை போன்ற பொருள்களிலும் வழங்கி வருகிறது. ஆசைகளும் உணர்ச்சிகளும் அறிவுக்குக் கட்டுப்பட்டிருந்தால் அதுவே சிறந்த அறமாகும். மனித அறிவு வளர்ச்சிக்கான பண்பட்ட நிலையின் வெளிப்பாடாக அறம் அமைகிறது. மனித இனத்தின் நலத்திற்காகவும் முன்னேற்றத்திற்காகவும் மனித சமுதாயம் வரையறுத்துக் கொண்ட ஒழுக்க நெறியே அறம் எனப்படும்.

அறம் என்பது எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றும் சேர்ந்து ஒன்றாகக் காட்சி தருகிறது. அறம் என்பது ஒரு முப்படைக் கண்ணாடியாகக் கூறினால், அதன் மூன்று பக்கங்களாக எண்ணம், சொல், செயல் விளங்குகின்றன எனலாம். 'எண்ணம்' அறத்தின்நிலை அமைதி ஆற்றலாகும். சொல் இயக்க நிலை ஆற்றலாகவும், செயல் இயங்கு நிலை ஆற்றலாகவும் விளங்கும். இம்மூவகை ஆற்றலும் உள்ளார்ந்த பண்பாக உறங்கிக் கொண்டிருக்கின்ற பொழுது, அறம் என்பது பொருளாக வெளிப்படுத்துவதற்குக் கருவியாக இருப்பது செயல். இச்செயல் நிலையே 'ஒழுக்கமென' உலகமே போற்றி வருகிறது. அவ்வொழுக்கம் மக்கள் உயிர்காக்க உறுதி பயக்கும் சிறப்புடையது என்றும் அத்தகைய சிறப்புடைய ஒழுக்கமே அறம் எனப் போற்றப்படுகிறது.

மனிதன் நன்நெறியில் இடைவிடாமல் ஒழுகுவதே ஒழுக்கம் என்று போற்றப்படுகிறது. இதனைத் திருக்குறளுக்கு உரை வகுத்த பரிமேலழகர், அறமாவது மனுமுதலிய நூல்களில் விதித்தன செய்தலும், விலக்கியன ஒழிதலுமாம். அஃது ஒழுக்கம், வழக்கு, தண்டம் என மூவகைப்படும். அவற்றுள் ஒழுக்கமாவது, அந்தணர்

முதலிய வருணத்தார் தத்தமக்கு நின்று, அவ்வவற்றிக்கு ஓதிய அறங்களில் வழுவாது ஒழுகுதல் என்று விளக்கியுள்ளார். இதில் சாதி பற்றிய செய்திகளை நாம் புறத்தே ஒதுக்கிவிட்டுப் பார்ப்போமானால், மனிதன் நலமாக வாழ்வதற்கும், அந்நல்வாழ்வின் பயனாகிய இன்பத்தை அடைவதற்கும் அவன் கடைபிடித்து ஒழுக வேண்டிய நல்ல பழக்க வழக்கங்களே ஆகும். தீயவை என்று ஒதுக்க வேண்டிய செயல்முறைகளையும் அறிந்து நல்லவனவற்றை மட்டும் பின்பற்றி ஒழுகுவதே அறமெனப் போற்றப்படுகிறது.

**ஒழுக்கம்:-**

சிலர் தாங்கள் வாழ்ந்து காட்டும் நெறி வையகத்துக்குப் பயன்பட வேண்டுமென்ற நோக்கில் எண்ணங்களை இலக்கிய வடிவில் தந்துள்ளனர். இவ்வாறு அமைந்த நூல்கள் கூறும் முடிவு எல்லாம் ஒழுக்கத்தில் உயர்ந்து நின்ற சான்றோர்கள் பெருமையையே கூறுகின்றன. மனித வாழ்க்கையை முறையாக வளப்படுத்தி வளர்ப்பது ஒழுக்கம். ஒழுக்கம் என்பதன் சுருக்கம் நல்ல பண்புகளாகும். இப்பண்புகள் மனிதர்களுக்கு உயிர் போன்றது. ஒழுக்கம் மேன்மையைத் தரக் கூடியது என்பதை,

**"ஒழுக்கத்தில் நீத்தார் பெருமை விழுப்பத்து வேண்டும் பனுவல் துணிவு"** -21

நூல்கள் ஒழுக்கத்தை வழியுறுத்துவனவாக அமைதல் வேண்டுமென்பதை இக்குறட்பா குறிப்பால் வலியுறுத்துகிறது. வள்ளுவரும் தம் நூலில் இறைவனை அறக்கடலாக உருவகப்படுத்தி அறத்தை எடுத்துக்காட்டுகிறார். மனிதராய்ப் பிறந்த ஒவ்வொருவருக்கும் ஒழுக்கத்தைத் தனது உயிராகக் கடைபிடித்தல் வேண்டும். ஒழுக்கமுடன் வாழ்பவரது வாழ்க்கையானது நன்மையான வாழ்வாக அமையும் இத்தகைய ஒழுக்கம் பற்றி வள்ளுவர் கூறுவது,

**"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்"** - 131

ஒருவனுக்கு என்றும் நீங்காத மேன்மையைத் தரவல்லது நல்லொழுக்கமே ஆகும். எனவே அவ்வொழுக்கத்தைத் தன் உயிரைவிட மேலாக மதித்துக் காத்துக் கொள்ள வேண்டும் என்று வள்ளுவர் கூறுகிறார்.

**அறத்தின் தன்மைகள்**

அறம் நல்வினை, ஐயம், ஏழைகளுக்கு அளித்தல், நோயாளிகளுக்கு மருந்து தருதல், நலமானது, இன்பம், தகுதியானது, கற்பு, நோன்பு, அறப்பயன், சமயம், ஞானம், அறச்சாலை, அறத்தெய்வம், நடுநிலைபேறும் கூற்றுவன் ஆகிய பொருள்களை பேரகரமுதலி தருகின்றது. அறம் சொல்லிற்கு இணையாக (Moral / Ethics) என்ற இரு சொற்கள் கூறப்படுகின்றன. அற்றது - அறம் - தன்னலப்பற்று அற்ற தூய்மை நிலையே சிறந்த அறம் என்பார் வள்ளுவர். எனவே, உள்ளத்தில் உண்மை, தூய்மை, மாசற்ற தன்மை ஆகியவற்றையே அறத்தின் முதன்மையானதாகக் கூறுகிறார்.

**"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன் ஆகுல நீர பிற"** - 34

மாசினை அகற்றினால் தான் ஒளி கிடைக்கும். எனவே உள்ளத்தில் மாசற்ற தன்மை வேண்டும் என்று மாசுக்கள் நான்கு என்றும் வகுத்துள்ளார். அறத்தின் வழி நிற்போர் பிறர் வளர்ச்சியைக் கண்டு பொறாமை கொள்ளுதல், பிறருடைய உடைமைகளுக்கு ஆசைப்படுதல், நமக்குக் கிடைக்காதபொழுது கோபமடைதல், கடுமையான சொற்கள் கூறுதல் (அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல்) என்னும் இந்நான்கையும் தவிர்த்தல் வேண்டும். உள்ளமானது மாசுக்கள் படிந்த சாக்கடை, இச்சாக்கடையை நாமே தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும். இதுவே அறமாகும் இதனை வள்ளுவர்,

**"அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்**
**இழுக்கா இயன்றது அறம்"**[4] -35

இவை நான்கும் மனிதனைத் தீய வழியில் இட்டுச் செல்லும். அதனைத் தடுத்து நிறுத்தவே அறம் வலியுறுத்தப்பட்டது. இல்லறம் - துறவறம் என்ற இரு வாழ்க்கைக்கும் அடிப்படையாக ஈதலும்

இசைபட வாழ்தலும் வலியுறுத்தப்பட்டன என்பதை இக்குறளின் மூலம் உலகுக்கு உணர்த்துகிறார்.

மனம் மகிழ்ந்து ஒவ்வொரு மனிதனும் ஒருவனுக்கு வேண்டிய பொருளினைக் கொடுத்தலினும், அவனைக் கண்டபொழுது முகம் மலர்ந்து இனிமையான பார்வையோடு உள்ளத்தினின்று கூறும் இனிமையான சொற்களே கூறுவானாயின் நன்மை பயக்கும் என்பதை,

"முகத்தான் அமர்ந்தினிது நோக்கி அகத்தானாம்
இன்சொ லினதே அறம்" - 93

இக்குறள் இன்சொல் இயம்புதல் அறத்தின் பாற்படும் என்று கூறுகிறது. அகமும் முகமும் மலர்ந்து, உள்ளம் மகிழும்படி இனிய சொற்களைப் பேசுவது நன்மை பயக்கும் என்று கூறுகிறார்.

மேலும், நீராடல் முதலிய புறத்தூய்மையால் பயனில்லை. அகத்தூய்மையே வேண்டப்படுவது எனக் குறள் வலியுறுத்தும்.

"புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும்" - 298

அகத்தூய்மை வாய்மையால் காணலாம் என்கிறார். உள்ளத்தில் தூய்மையிருக்குமாயின் முகத்தில் தூய்மை தோன்றும். மலர்ச்சி தெரியும். இதன் மூலம் முகக்குறிப்பைக் கொண்டு அகக் குறிப்பைப் பற்றிக் கூறுகின்றார்.

மேலும், உவகையிலும், வெகுளியிலும் அளவுக் கருவி முகத்தைவிட வேறு இல்லை என்பதை,

"முகத்தின் முதுக்குறைந்தது உண்டோ
உவப்பினும் காயினும் தான்முந் துறும்" 707

என்ற குறளின் மூலம் மிகவும் ஆழமாகவும், தெளிவாகவும் எடுத்துக் காட்டுகிறார்.

## துறவறமும் இல்லறமும்:-

இல்வாழ்க்கையினும், துறவு வாழ்க்கையினும் அறநெறி நிற்றல் வேண்டும். அறத்தின் மூன்று கோணங்களும் எந்நெறி நிற்பார்க்கும், செந்நெறி காட்டும் சீரிய வழிகாட்டிகளாகும். கணவனும் மனைவியும் மனத் தூய்மையுடையவராகவும் சொல்லிலும் செயலினும் தூய்மையுடையவராகவும் இருத்தல் வேண்டும். இவ்வுள்ளத் தூய்மைக்கு அன்பு அடிப்படையாய் உள்ளது. இல்வாழ்க்கை பண்பும், பயனும், அன்பும், அறனுமே என்பது வள்ளுவர் கொள்கை.

வள்ளுவர் துறவறத்தை ஏற்றாலும், இல்லறத்திற்கே முக்கியத்துவம் தருகிறார். இல்லறத்திற்கு வேறாகத் துறவறம் தோன்றியது. சமுதாயத்தில் பலவேறு காரணங்களால் துறவறத்தை மேற்கொள்வது உண்டு. வள்ளுவர் இல்லறத்தையே பெரிதும் போற்றினார்.

"அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றின்
போஒய்ப் பெருவது எவன்?"- 46

"துறந்தாரின் தூய்மை உடையர் இறந்தார்வாய்
இன்னாச்சொல் நோற்கிற் பவர்"-159

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"- 50

இக்குறட்பாக்களின் வழித் துறவறத்தை விடுத்து இல்லறத்தை வலியுறுத்துகிறார். அறத்துப்பாலில் 38 அதிகாரங்களில் துறவறத்திற்கு 15 அதிகாரங்களும், 22 அதிகாரங்கள் இல்லறத்திற்கும், ஓர் அதிகாரத்தை இரு திறத்தார்க்கும் கூறியுள்ளார். எனவே இல்லறத்திற்கு எவ்வளவு முக்கியத்துவம் தருகிறார் என்பதை அறியலாம்.

பற்றற்ற துறவிகளின் பெருமையைப் போன்று நன்மை, தீமைகளை ஆராய்ந்து அறநெறியில் வாழ்வோரே உலகில் உயர்ந்தோர் என்பதை,

"இருமை வகைதெரிந்து ஈண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு" - 23

என்னும் குறளில் துறவறப் பெருமை சாற்றியும், துறவியின் சீர்த்தியை சுட்டியும் உலகுக்கு உணர்த்துகிறார்.

திருவள்ளுவர் இல்லறம் துறவறம் என இரண்டாகப் பகுத்து அவ்விரண்டனையும்

போற்றுவர். தூய்மையான உள்ளத்திலிருந்து பிறக்கும் தூய்மையான சொல்லின் வழியே தோன்றுவதே தூய்மையான செயலாகும். பிறர் பழிக்கு ஆளாகாமல் அறத்தோடு வாழ வேண்டுமென்பதை.

"அறனெப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்ப(து) இல்லாயின் நன்று" - 49

என்ற குறள் இல்லறச் சிறப்புரைக்கும். அதாவது அறம் என்று சொல்லப்படுவது குடும்ப வாழ்க்கையைத்தான். அதுவும் யாருடைய பழிக்கும் ஆளாகாமல் இருத்தல் சிறப்பு. இச்சிறப்பை இல்வாழ்க்கையின் அறத்தை பிற்காலச் சந்ததியினருக்குப் பரிசளிக்கிறார். மேலும் இல்லத்தில் அறம் அமைத்து இணங்கி இலங்குவதால் தான் இல்லறம் எனப்பெயர் பெற்றது என்கிறார்.

இன்றைய வன்முறைக் கலாச்சாரத்திற்கு இது ஒத்து வருமா? என்று எண்ணும் முன்பு மிக எளிமையாக மனமாசு இல்லாது இருத்தலே அறம் என்கிறார். இத்தகு அறவழியில் பொருளீட்டி அதைப் பகுத்துண்டு வாழ்தலே இல்லறத்தாரின் சிறப்பு என வள்ளுவர் அறத்தையே வாழ்வியல் கூறாக்கியுள்ளார். இதனை,

"பழியஞ்சு பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியஞ்சல் எஞ்ஞான்றும் இல்"-44

என்று விளக்கியுள்ளார். எனவே, இல்லறமாயினும் துறவறமாயினும் மனத்தில் மாசின்றி ஒழுக வேண்டும். ஒழுகாவிடில் செய்யும் பிற செயல்களெல்லாம் ஆரவாரச் செயலாக வீண் பகட்டாகக் கருதப்படும். இதனை,

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற" - 34

தனிமனித அறமானது புகழையும் செல்வத்தையும் தரவல்லது நல்லறமே. அவ்வறத்தைவிட நன்மை தரவல்லது வேறொன்றுமில்லை. மனத் தூய்மையுடன் எதைச் செய்தாலும் அது அறமேயாகும் என வள்ளுவர் குறள்வழி விளக்குகிறார்.

இல்வாழ்க்கையில் வாழ்க்கைத் துணை நலத்தோடு, மக்கட்பேறு பெற்று, அன்போடு இனியவை பேசி, செய்த நன்றியறிந்து, நடுவுநிலைமையுடன் இருந்து, ஒழுக்கத்தோடு பிறனில் விழையாது, வெறுக்காது புறங்கூறலும், பயனில சொல்லிலும் இன்றித் தீவினைக்கு அஞ்சி ஒப்புரவறிதலுடன் ஈகைக் குணம் பெற்றுப் புகழ்பெற வாழ்தலே இல்வாழ்க்கை என்பது வள்ளுவர் வகுத்தவழி. இவை அனைத்தையும் செயல் வடிவில் பெறுவது அறத்தில் சிறந்தாகும்.

**உயிர் 'வதை' செய்யாமை**

அறங்களில் மிகவும் சிறந்தது எவ்வுயிர்களையும் கொல்லாதிருத்தல் ஆகும். அவ்வாறு பிற உயிர்களைக் கொல்வது, பல பாவங்களை உண்டாக்கி தீவினையனைத்தையும் சேர்த்துத் தரும். தன் உயிர் உடம்பை விட்டு நீங்குவதாக இருந்தாலும், அதைத் தடுப்பதற்காகப் பிற உயிரிணங்களைக் கொல்லுதல் கொடிய செயல் என்பது வள்ளுவர் கருத்து.

"அறவினை யாதெனின் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாம் தரும்" -321

"கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவா ரகத்து"-329

இக்குறட்பா கொலைத் தொழில் செய்பவரை மாக்கள் என இழிபிறவியாகக் கூறுகிறது. எனவே பிற உயிர்களுக்குத் தீங்கு செய்யாமையும், கொல்லாமையும் அறத்துடன் அடங்கும் என்கிறார்.

இவ்வாறெல்லாம் அறத்தை உண்மை, வாய்மை, மெய்ம்மை ஆகிய கோணங்களில் வழங்கும் கருத்தாழம் நோக்கித்தான் ஆலத்தூர்கிழார், திருக்குறளை, "அறம்" என்றே குறிப்பிடுகிறார்.

**அறவழி நிற்றல்:-**

ஆட்சியின் நேர்மைக்கு அடிப்படையில் அமைவது, எவ்வுயிர்க்கும் செங்கோல் பூண்டொழுகும் அறவோராய அந்தணர்தம் நூற்களும் அறமேயாகும் என்பதனை,

"அந்தணர் நூற்கும் அறத்திற்கு ஆதியாய்
நின்றது மன்னவன் கோல்" - 543

என்ற குறளின் மூலம் அரசனின் கோல் அறத்தின் வழி நின்றால் தான் அரசுக்குப் பெருமை. அதனால்தான் ஆட்சி செங்கோலாட்சியாக இருக்க வேண்டும். குடியாட்சியிலும், கோலாட்சியிலும், வேறு எம்முறை ஆட்சியிலும் ஆட்சியில் நேர்மையும், அறமும் பொருந்தி நிற்றல் வேண்டும் என்கிறார்.

**ஆக்கம்:-**

ஆக்கமும், ஊக்கமும் பெருமையும் சிறப்பும் தருவது அறம். இதை விட வேறு இல்லை. அவ்வறத்தைச் செய்வதை மறந்தால் அதைவிடக் கேடு தருவதும் வேறில்லை என்பதை,

"அறத்தினூங்கு ஆக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு" - 32

என்ற குறள் வலியுறுத்துகின்றது. அறத்தைவிட சிறந்த செல்வமோ, சிறப்போ வேறொன்றுமில்லை என்று குறிப்பிடுகின்றது.

அறம் செய்வதற்கு காலம், நேரம் பார்க்க வேண்டியதில்லை என்பதுதான் வள்ளுவரின் ஆழமான கருத்தாகும். எனவே பிறருக்கு உதவி செய்து அறநெறியில் நிற்க விரும்பும் ஒருவன் பொன்னைச் சேர்த்துப் பின் அறச்செயல் செய்யலாம் என எண்ணிப் பொன்னைச் சேர்த்துவிட்டார். பொன் சேர்த்தவன் எதிர்பாராது நோய் வாய்ப்பட்டு இறந்து விட்டான். இவ்வாறு பின்னால் அறம் செய்ய காலம் வாய்க்கும் எனக் காத்திருக்காது அறச் செயலைச் செய்து முடித்தல் வேண்டும் என்பதை,

"அன்றறிவாம் என்னாது அறம்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை"-36

என்ற குறளின் மூலம் கூறுகின்றார். ஒருவன் இறக்கும் போது அழியாத் துணையாக அவனைத் தொடர்ந்து செல்வது அறச்செயல். பின் பார்த்துக்கொள்ளலாம் என்று தள்ளிப் போடாமல் அவ்வறச் செயலை விரைந்து செய்தல் வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

**பிறர் நலம் பேணலும் அறப் பொருளும்:-**

சான்றோர்கள் சமுதாய முன்னேற்றத்திற்காக தன்னை அர்ப்பணித்துக்கொண்டனர். அதனால் தான் சமுதாய முன்னேற்றமடைய முடியும் என்று நம்பினர். இதனால் ஏற்றத்தாழ்வு நீங்கி சமத்துவம் மலர்ந்து அமைதி நிலவும். இதனை உணர்ந்த விரும்பிய வள்ளுவர்,

"இன்னா செய்தார்க்கும் இனியவே
செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு"-987

நமக்குத் துன்பம் செய்தவர்க்கும் நன்மையே செய்ய வேண்டும். தீமை செய்தால் நற்பண்புகள் இருப்பினும் பயனில்லாமல் போய்விடும் என்பதை வலியுறுத்துகிறார்.

நேரிய நெறியில் நின்று தன் ஆற்றலைக் கொண்டு, நேர்மையான நிலையில் அறநெறியில் ஈட்டும் பொருளே இன்பத்தைத் தரும். அறத்துக்கும் இன்பத்துக்கும் அறநெறியில் ஈட்டிய பொருளே அடிப்படையாய் அமையும் என்பதை,

"அறன் ஈனும் இன்பமும் ஈனும் திறன்அறிந்து
தீதின்றி வந்த பொருள்" - 754

என்ற குறள் மூலம் மிகவும் தெளிவாக உலகுக்கு எடுத்துக் காட்டினார்.

**பேரின்பம் அடைதல்:-**

நல்லின்பம், பேரின்பம் வேண்டுமென்றால் அறநெறியில் தான் நிற்க வேண்டும். பேரின்பம் வேண்டுபவர் சிற்றின்பத்துக்கு ஆசைபட்டு அறனில்லாத செயல்களைச் செய்யமாட்டார் என்பது வள்ளுவர் கருத்து இதனை,

"சிற்றின்பம் வெ∴கி அறன்அல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர்"- 173

என்கிறார். எனவே தான் ஒருவன் செய்ய வேண்டுவது அறம், நீக்க வேண்டுவது பழி எனத் திருக்குறள் தெளிவுப்படுத்துகிறது.

**அறத்தின் ஆற்றல்:-**

வாழ்க்கையில் அறமே என்றும் நிலைத்து நிற்கும் தன்மையுடையது. தீவினையால் அறத்தை

என்றும் வெல்ல இயலாது. எலும்பில்லாத உயிர்களை வெயில் காய்வது போலத்தான் அன்பு இல்லாத உயிர்களை அறம் வருத்தும் என்பதை,

"என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம்" - 77

என்ற குறளில் அறத்தின் ஆற்றல் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

"அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்
புறத்தே புகழும் இல" -39

அறத்தொடு பொருந்தி வருவதே இன்பம். அதனோடு பொருந்தாது வருவன எல்லாம் துன்பம் தரும் புகழுடையன அல்ல என்பது இக்குறளின் கருத்து ஆகும்.

**விருந்தும் ஒழுக்கமும்:-**

அறமே விருந்தாக அமையும் காலமும் உண்டு அதற்கு நாம் சினத்தினின்று நம்மைக் காத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில், சினத்தை விடப் பகை வேறொன்றுமில்லை. அறம், பொருள், இன்பம் என்ற முப்பாலிலும் வள்ளுவர் அறத்தையே அடிப்படையாக அமைத்தார். பொருட்பாலில் அரசியலை வகுக்கும் போதுகூட அறத்தையே முதன்மையாக்கினார். அரசு தனக்குத் துணையாக வேண்டியவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும்போதும், பல இலக்கணங்களை ஆராய வேண்டும். அவற்றில் அறமும் ஒன்று. நண்பர்களாகக் கொள்பவர்கள் அறிவிலும், ஆற்றலிலும் , அனுபவத்திலும் மூத்தவர்களாய் இருக்க வேண்டும். அவர்கள் திறமையை ஆராய்ந்து தெரிந்து பின் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது கொள்கை.

"அறன்அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்"-441

என்பது வள்ளுவர் வாக்கு.

**இன்ப நெறி:-**

ஈதலால் பிறருக்கு இன்பம் விளைகிறது. இன்னா செய்தலை அறமல்லாத செயல் என்கிறோம். இன்பம் அளிக்கும் பண்பே அறம் என்பதை,

"அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல" - 39

"இன்பம் பயப்பது அறம்" என்று வள்ளுவர் கூறி பின் "அறம் எதைப் பயக்கின்றதோ அது மட்டுமே இன்பம்" எனக் கூறுகிறார். அறவழியால் வருவது இன்ப வாழ்வு ஆகும். மற்றைய வழிகளில் வருவனவெல்லாம் இன்பத்திற்குப் புறம்பானவை அவை உண்மையான இன்பம் அல்ல என்பதோடு, அவற்றால் புகழும் இல்லை என்பதாம். எனவே பிறருக்கு உதவி செய்து வாழ்வது மட்டுமே புகழுக்குரியது என்கிறார்.

**இறைமையும் புண்ணியமும்:-**

இறைவனைக் கடலாக முழுமை பெற்ற அற வடிவமாகக் கண்டு, அவ்விறைவனை அடைதலே உலகத் துன்பக் கடல்களைக் கடக்க வழியாகும் என்பதை,

"அறஆழி அந்தணன் தாள் சேர்ந்தார்க்கு அல்லால்
பிறவழி நீந்தல் அரிது" - 8

அருள் நிறைந்த கடலாக உருவகம் செய்யப்படுதலில், இறைமை இதுவென்பதும் விளங்கும் என்ற கருத்தை அந்நூலின் மூலம் காட்டுகிறார்.

மனிதன் செய்கின்ற செயல்கள் எல்லாம் அச்செயல்களினால் உண்டாகும் பயனைக் கருத்தில் கொண்டு நல்ல செயல்கள், தீய செயல்கள் என இரு வகையாகப் பாகுபாடு செய்யப்பட்டது.

ஒரு மனிதன் செய்கின்ற செயலின் விளைவாக, அவனுக்கும் பிறருக்கும் நன்மை செய்தால் அவை நற்பண்புகள் என்று கூறுவர். மனிதன் செய்கின்ற குறிப்பிட்ட ஒரு செயலால் அவனுக்கு நன்மையும், பிறருக்கு எவ்வழியிலேனும் தீமையும் உண்டாகுமானால் அதை அறச் செயல் என்று உலகம் ஏற்பதில்லை. எல்லோர்க்கும் நன்மை செயல்களைச் செய்வதே அறமென்று சான்றோர்கள்

கருதுகின்றனர். அத்தகைய நற்செயலைச் செய்வதனால் ஒருவனுக்குப் புகழ் உண்டாகிறது. மறுமைக்கு ஒரு பயனும் விளைகின்றது. அப்பயனைப் 'புண்ணியம்' என்று கூறுவர்.

நற்செயல்களின் விளைவாகக் கிடைக்கும் 'புண்ணியத்தை' அறம் என்று கூறும் வழக்கு தொன்மையானதாகும்.

**"அறன்ஆக்கம் வேண்டாதான் என்பான்
பிறன்ஆக்கம்
பேணாது அழுக்கறுப் பான்" - 163**

என்ற குறளில் 'புண்ணியம்' என்ற சொல் மூலம் அறத்தை அறிந்தோம்.

**ஈதல்:-**

மனித வாழ்வில் முக்கியமாகத் தலைசிறந்த விளங்கக் கூடிய ஒன்று ஈகைப் பண்பு. அறம் என்பது பொன்னையும் பொருளையும் கொடுப்பது மட்டுமல்ல. வறியோனுக்குப் பொருள் கொடுப்பதும் பசித்தோனுக்கு உணவிடுவதுமே அறம் என்றொரு கருத்துண்டு. வறுமையால் வாடி நிற்பவர் மீது கொள்ளும் அன்பு, இரக்கம் போன்ற உயர்ந்த பண்புகளே அறத்தின் அடையாளத்திற்கு வித்திடுகின்றன. இரக்கமுள்ள மனிதனிடம் ஈகைக் குணம் நிறைந்திருக்கும். இந்த இரக்கக் குணம்தான் நல்லுணர்வை ஏற்படுத்தும் உடற்கூறாக அமைகிறது. இந்த இரக்க உணர்வானது யாருக்கெல்லாம் சென்றடைய வேண்டும் என்றும் சுட்டிக் காட்டுகின்றது. ஒன்றும் இல்லாத வறுமைப்பட்டவர்க்குத் தம்மால் இயன்ற ஒரு பொருளைச் கொடுத்து உதவுவது சிறந்த ஈகைப் பண்பாகும். தன்னிடம் இருப்பதை 'இல்லை' என்று கூறாது அவருக்கு வேண்டிய பொருளைக் கொடுத்துதவும் அறச்செயலே ஈகையாகும். அதிலும் குறிப்பாக தமக்கென்று ஒரு பொருளும் இல்லாத நிலையில் ஏழைகளுக்குச் சிறிதளவு பொருளாவது கொடுத்து உதவுதே மேன்மையான அறமாகும். மற்றவர்க்குக் கொடுப்பதெல்லாம் பயனை எதிர்பார்த்துக் கொடுக்கும் தன்மையுடையது. இதனையே,

**"வறியார்க்கொன்று ஈவதே ஈகை மற்றெல்லாம்
குறியெதிர்ப்பை நீரது உடைத்து" - 221
பகுத்தூண் மரீஇ யவனைப் பசியென்னும்
தீப்பிணி தீண்டல் அரிது - 227**

என்ற குறள்களில் தன்னிடம் இருப்பதை பலருக்கும் பிரித்துக் கொடுப்பதில் துன்பமின்றி செழிப்பாக வாழ்வான் என்று அறச்செயலையும் ஈகையும் கூறப்பட்டுள்ளன.

பிறரிடம் பயன் எதிர்பாக்கும் நோக்கோடு அமைவது அறம் ஆகாது உண்மையான அறம் என்பது குருடர், முடவர், செவிடர் ஆதரவற்றோர் மற்றும் நோயாளிகள் போன்ற எளிய மக்களுக்குச் செய்யப்படுகின்ற உதவியே இன்பம் தரக் கூடிய அறமும் ஈகையாகும்.

**ஆக்கச் செயல்:-**

அறம் உயிருக்குச் சிறப்பையும் செல்வத்தையும் தரும். எனவே மக்களுக்கு அதனை விட ஆக்கம் தருவது பிறிதில்லை எனக் கூறும். பிறிதொன்றும் அத்துணை ஆக்கம் தராது. பிறருக்கு அவ்வறமே அவனுக்குச் சிறப்பையும் செல்வத்தையும் கொடுக்கும். அறச் செயல்களை தம்மால் முடிந்த வழிகளில், வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் செய்ய வேண்டும். பொறாமை, ஆசை, சினம், கடுஞ்சொல் ஆகிய நான்கினையும் நீக்கியவராய் வீடுபேறு அடையச் செய்வது அறமாகும் என்பதை,

**"சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு" - 31**

என்ற குறளின் மூலம் உலகுக்கு எடுத்துக் காட்டுகிறார். இக்குறளில் ஆக்கத்தினும் அறம் சிறந்தது என்று வள்ளுவர் கூறியுள்ளார். உயிருக்கு ஆக்கம் தரும் என்பதைச் சிந்தித்துச் செயல்பட வேண்டும். உயிருக்கு அறத்தால் வலுவுண்டாகிறது வளர்ச்சியடைந்து ஆற்றல் பெருகுகிறது.

**"அறத்தினூங்கு ஆக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு" - 32**

ஒருவனுக்கு அறத்தைவிட மேலான செல்வம் வேறு எதுவும் இல்லை. அத்தகைய அறத்தைச் செய்யாது மறந்துவிட்டால் அதைவிட வேறு கேடு இல்லை.

"அறன்ஆக்கம் வேண்டாதான் என்பான்
பிறன்ஆக்கம்
பேணாது அழுக்கறுப் பான்" - 163

மற்றவருடைய செல்வத்தைக் கண்டு மகிழ்ச்சி அடையாது அவர் மீது பொறாமைப்படுபவன் அறத்தையும் பொருளையும் விரும்பாதவன் என்று கருதப்படுவான். அறச்செயல்களை தம்மால் அளவில் வாய்ப்புக் கிட்டும்போதெல்லாம் தவிர்க்காது செய்ய வேண்டும். பொறாமை, ஆசை, கடுங்கோபம், கடுஞ்சொல் இந்நான்கினையும் நீக்க வேண்டும். அறம் மறுமையில் வீடுபேற்றையும், இம்மையில் செல்வங்களையும் தரும். எனவே, அறத்தைவிட மேலானது வேறொன்றுமில்லை. ஒருவன் தன் வாழ்நாளில் செய்ய வேண்டியது தீயது ஒழித்து, நல்லன செய்தலே சிறந்த அறச் செல்வமாகும்.

முடிவுரை:-

அறமே பெருமைக்கும் ஆற்றலுக்கும் பிறப்பிடம் என்பதும் இதன் மூலம் அறியும் கருத்துகளாகும். அறநெறி உணர்ந்து, அதன்வழி நின்று, தூய்மை பெற்று வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிவகுத்து, வள்ளுவ நெறியில் வாழ்ந்து காட்ட வேண்டும். இதுவே நாம் வள்ளுவருக்குச் செய்ய வேண்டிய தொண்டு, இவ்வழி என்றென்றும் நின்று பிறருக்கு எடுத்துக்காட்டாக விளங்க வேண்டும். இல்லற வாழ்க்கையிலும், துறவு வாழ்க்கையிலும் அறமே சிறந்தது. அறங்களால் சமுதாயத்திற்கு நன்மை செய்யவும், உண்மையாகவும், நேர்மையாகவும், ஊக்கத்துடனும், உறுதியுடனும், மற்றவருக்குப் பணிந்தும், மதிப்பளித்தும் செய்யக் கூடியது அறம் என வள்ளுவர் கூறுகிறார். அறத்தை ஓரளவு நற்செயல்களுடன் விட்டுவிடாமல், எவ்வகைகளிலெல்லாம் செய்ய இயலுமோ அவ்வழிகளிலெல்லாம் செய்ய வேண்டும் என்ற கருத்தை வள்ளுவர் வலியுறுத்துகிறார். வள்ளுவர் வகுத்த அறத்தின் நற்பண்புகளை அறநெறியின் மூலம் உலகுக்கு எடுத்துக் காட்டியதை இக்கட்டுரை உணர்த்துகிறது.

ღ